**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்**

**முன்னிலை: திரு.C. தினேஷ்குமார், B.A.LL.B(Hons)., LL.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.2, திண்டுக்கல்**

**2026ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07ம் நாள் திங்கட்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 280/2013**

**CNR.No. TNDG03-000839-2013**

அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
நகர் வடக்கு காவல் நிலையம்
திண்டுக்கல்
குற்ற எண். 163/2013
சட்டப்பிரிவுகள் 147, 353, 506(i) of IPC

... குற்ற முறையிடுபவர்

/ எதிர் /

1. அருண்குமார், (25/2013), -A1
த/பெ.கண்ணன்,
கூட்டுறவு நகர்,
திண்டுக்கல்.

2. பொன்ராஜ், (47/2013), -A2
த/பெ. துரைராஜ்,
கூட்டுறவு நகர்,
திண்டுக்கல்.

3. தினேஷ்குமார், (23/2013), -A3
த/பெ. கண்ணன்
கூட்டுறவு நகர்,
திண்டுக்கல்.

4. ஆதிலட்சுமி, (44/2013), -A4
க/பெ. பொன்ராஜ்,
கூட்டுறவு நகர்,
திண்டுக்கல்.

5. அக்கம்மாள், (57/2013), –A5
க/பெ. கண்ணன்,
கூட்டுறவு நகர்,
திண்டுக்கல். ...எதிரிகள்

**Case – Summary**

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No.280 of 2013 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by<br>Sub Inspector of Police<br>Town North PS. Dindigul in Cr.No. 163/2013 |
| 3. | Name of the accused | Arunkumar- A1<br>Ponraj- A2<br>Dinesh Kumar- A3<br>Astalakshmi- A4<br>Akkammal- A5 |
| 4. | Father's Name | 1. Kannan – A1<br>2. Durairaj- A2<br>3. Kannan- A3<br>4. W/o. Ponraj- A4<br>5. W/o. Kannan- A5 |
| 5. | Occupation | - |
| 6. | Residence | Kootturavu Nagar, Dindigul- A1 to A5 |
| 7. | Age | 25/2013 – A1<br>47/2013 – A2<br>23/2013 – A3<br>44/2013 – A4<br>57/2013 – A5 |
| 8. | Date of occurrence | 02.03.2013 |
| 9. | Date of complaint<br>Date of filing Charge sheet | 02.03.2013<br>29.05.2013 |
| 10. | Date of apprehension | 03.03.2013- A1 to A3<br>18.03.2013– A4, A5 (Surrender) |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | Date of release on bail | 08.03.2013 – A1 to A3 | | |
| 12. | Date of commitment | Not applicable | | |
| 13. | Date of furnishing copies of document U/s. 207 Cr.P.C. | 04.03.2019 | | |
| 14. | Date of questioning / Charge framing and plea of the accused | On 15.07.2026 the A1 to A5 were questioned on substance of accusation U/s. 147, 353. 506(i) of IPC. A1 to A5 denied as false case and pleaded not guilty and claims to be tried. | | |
| 15 | Date of commencements of trial -The date of examination – in chief and cross- examination of a witness | Witnesses | Examined in – Chief | Examined - in Cross |
| | | PW1 | 14.08.2026 | 14.08.2026 |
| | | PW2 | 14.08.2026 | 14.08.2026 |
| | | PW3 | 17.08.2026 | 17.08.2026 |
| | | PW4 | 21.08.2026 | 21.08.2026 |
| 16. | The date of examination of the accused under section 313 of the code – Closed of trial | 21.08.2026 | | |
| 17. | Sentence on order | முடிவாக, 1 முதல் 5 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147, 353, 506(i) ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றவாணங்களின் மூலம் நிரூபிக்கப்படாததால், 1 முதல் 5 எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. | | |
| 18. | Service of copy of Judgment or finding on | No. The Judgment was uploaded | | |

| | | |
|---|---|---|
| | accused | on CIS portal and made available in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | No case property was seized and hence no property order passed. |

இவ்வழக்கு 29.05.2013ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.280/2013 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K. சலீம், M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பார்வையிட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்புரை</u>

**<u>I. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

1. அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 10.02.2013ம் தேதி இரவு 00.30 மணிக்கு துர்காதேவி என்பவர் தாயாரின் வீட்டில் இருக்கும்போது தகராறு செய்ததாக கொடுத்த புகாரைப் பெற்று சாட்சி 1 ஆன சார்பு ஆய்வாளர் திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய குற்ற எண்.77/2013 பிரிவு 147, 294(பி), 448, 427, 323, 506(ii) இதச ஆக வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வந்த நிலையில் மேற்கண்ட வழக்கின் எதிரிகள் நீதிமன்றத்தின் மூலமாக முன் ஜாமின் பெற்று 01.03.2013ம் தேதி

திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் தினமும் 10.00 மணிக்கு கையெழுத்து போட உத்தரவு பெற்று கையெழுத்து போட்டு வந்த நிலையில் இன்று 02.03.2013ம் தேதி காலை சுமார் 09.35 மணிக்கு சாட்சி 1 நிலையத்தில் இருந்து நடப்புத்தாள்களை பார்வையிட்டு கொண்டு இருந்தபோது மேற்படி வழக்கின் எதிரிகள் நிபந்தனை ஜாமின் கையெழுத்து போடவந்தவர்கள், சாட்சி 1யிடம் கையெழுத்து போட கேட்கும் பொழுது, சாட்சி 1 அவர்களை பார்த்து 10.00 மணிக்குத்தான் கையெழுத்து போடவேண்டும் ஏன் முன்னாடியே வருகிறீர்கள் என்று கேட்டவரிடம், 2,4 எதிரிகள் நீ எப்படி எங்க மீது FIR போடலாம் என்று ஒருமையில் பேசியும், மற்ற மூன்று எதிரிகள் எங்களுக்கு DIG, IG மற்றும் பெரிய பெரிய அதிகாரிகளெல்லாம் இருக்காங்கள், எங்கள் மீது FIR போட்ட விபரம் தெரிந்தால் உன்னை தொலைத்து கட்டிவிடுவார்கள் என்று மிரட்டியும், எதிரிகள் அனைவரும் மேற்படி நடப்பு தாள்களை பார்க்கவிடாமல் அரசு பணியை தடுத்தும், 2ம் எதிரி வாசலில் நின்று நீ வெளியே வா உன்னை என்ன செய்கிறேன் பாரு என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 353, 506(i) IPC ன் படி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**II. வழக்கின் நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு வனைந்து குற்றச்சாட்டை குறித்து வினவுதல்:**

2. குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் எதிரிகளுக்கு எதிராக முகாந்திரம் இருந்ததால் இந்நீதிமன்றத்தால் மேற்படி எதிரிகளுக்கு எதிராக இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்திலிருந்து

எதிரிகளுக்கு இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பி, அவர்கள் முன்னிலை ஆனவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் 04.03.2019 அன்று இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 353, 506(i) IPC ன் கீழான குற்றச்சாட்டின் சாராம்சத்தை விளக்கிக் கூறியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்ததால், எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் 147, 353, 506(i) IPC –ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கிக்கூறிய போது குற்றவாளி இல்லை என மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**III. அரசு தரப்பு சாட்சிகள்**

3. அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபிக்க மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**IV. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :**

4. புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்றசாட்சியத்தில், கடந்த 2013ம் வருடம் தாலுகா காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது, சார்பு ஆய்வாளர் சில்வியா 02.03.2013 அன்ற நிலையத்தில் பெண் சார்பு ஆய்வாளர் பதிவு செய்த தாலுகா காவல் நிலைய குற்ற எண். 77/2013 சட்டப்பிரிவுகள் 147, 294(பி), 448,427, 323, 506(ii)

இதச படி எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்த பின்பு எதிரிகள் நீதிமன்றத்தின் முன் ஜாமின் பெற்ற 01.03.2013ம் தேதி முதல் திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் தினமும் 10.00 மணிக்கு கையொப்பம் செய்யவேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டநிலையில் 02.03.2013ம் தேதி சில்வியா நிலைய பொறுப்பில் இருந்தபோது எதிரிகள் பெண் சார்பு ஆய்வாளரைப் பார்த்து ஏன் பொன்ராஜ், அஷ்டலெட்சுமி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தீர்கள் என்று வாக்குவாதம் செய்தவர்களை தாங்கள் விலக்கிவிட்டு அதன்பின்பு நகர் வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் புகார் கொடுத்து அதன்பேரில் தன்னை சார்பு ஆய்வாளர் விசாரித்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5. தலைமைக்காவலர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார்.

6. இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், "கடந்த 2013ம் வருடம் திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராகப் பணியிலிருந்தபோது, கடந்த 10.02.2013ம் தேதி இரவு 00.30 மணியளவில் திண்டுக்கல் பாலகிருஷ்ணாபுரத்தைச் சேர்ந்த துர்க்கா தேவி என்பவர் வீட்டில் இருந்தபோது அவரின் கணவர் வந்தார் என்றும், கணவர் மற்றும் அவரின் குடும்பத்தாருடன் வந்து தகராறு செய்ததாக கொடுத்த புகாரினைப்பெற்று திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய குற்ற எண்.77/2013 சட்டப்பிரிவுகள் 147, 294(b), 448, 427, 323, 506(ii) IPC ஆக பதிவு செய்ததாகவும்,

எதிரிகள் நீதிமன்ற முன்பிணைப்பெற்று 01.03.2013 முதல் திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் தினமும் காலை 10.00 மணிக்கு கையொப்பம் போட உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், 02.03.2013 அன்று காலை 9.35 மணிக்கு, தான் நிலையத்தில் இருந்தபோது, எதிரிகள் கையொப்பம் போட வந்தபோது புகார்தாரரை ஒருமையில் பேசியும், அரசு பணியை செய்யவிடாமல் தடுத்து, கொலை மிரட்டல் விடுத்தது பற்றியும், அதனால் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 2013ம் தேதி சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த கோபாலகிருஷ்ணனின் கையொப்பம் கையெழுத்து நன்கு பரிட்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 02.03.2013ம் வருடம் மாலை 15.15 மணிக்கு திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சில்வியா ஜாஸ்மின் என்பவர் நகர் வடக்கு காவல் நிலையத்தில் நிலையம் ஆஜராகி அப்போது பொறுப்பில் இருந்த நகர் வடக்கு காவல் சார்பு ஆய்வாளர் கோபாலகிருஷ்ணனிடம் கொடுத்த புகாரினைப்பெற்று நிலைய குற்ற எண்.163/2013 சட்டப்பிரிவு 147, 353, 506(1) IPC ஆக பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார் என்றும், பின்பு 02.03.2013ம் தேதி 16.30 மணிக்கு சம்பவ இடம் சென்று, சம்பவ இட சாட்சிகள் இன்னேசியஸ் இன்பராஜ், சகாயராஜ் ஆகியோர்களை விசாரித்து மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகள் சார்பு ஆய்வாளர் சில்வியா ஜாஸ்மின், சார்பு

ஆய்வாளர் மனோகரன், சிறப்பு சார்பு ஆய்வாளர் கந்தசாமி, தலைமைக்காவலர் செல்வம் பெண் தலமைக்காவல் ஆய்வாளர் மஞ்சுளா, காவலர் அழகம்மாள், குமார் ஆகியோரை விசாரித்து சம்பவ சாட்சிகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சம்பவம் உண்மையென தெரியவர எதிரிகளைத் தேடிவந்த நிலையில் எதிரி திண்டுக்கல் ரவுண்ட் ரோடு விஜயன் பேக்கரி முன்பு நின்று கொண்டிருந்தபோது எதிரிகள் A1–அருண்குமார், A3– தினேஷ் குமார் ஆகியோர்களை காலை 9.30 மணிக்கு கைது செய்து 10.00 மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து தக்க பிணைய தாரருடன் எதிரிகளை விடுவித்தார் என்றும், எதிரி A2– பொன்ராஜ் என்பவரை காட்டாஸ்பத்திரி அருகே நின்று கொண்டிருந்தவரை 12.45 மணிக்கு கைது செய்து நிலையம் அழைத்துவந்து வைத்து தக்க பிணைய தாரருடன் எதிரியை விடுவித்தார் என்றும், A4,A5 ஆகிய எதிரிகள் மாவட்ட நீதிமன்றத்தில் முன்ஜாமின் பெற்று வெளியே சென்றுள்ளார்கள் என்றும், 15.05.2013ம் தேதி எதிரிகள் எதிராக சட்டப்பிரிவு 147, 353, 506(i) IPC–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிவுற்றது.

### V.எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்:

8. அரசு தரப்பில் சாட்சியத்தை முடித்துக் கொண்டபின்பு எதிரிகளுக்கு பாதகமாக அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சங்கதிகளை கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் 21.08.2026 நாளன்று தொகுத்தளித்து வினாவியபோது அரசு தரப்பு சாட்சியங்களை "பொய் சாட்சி" என்று

சாட்சியங்களை மறுத்தார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறினார்கள். அத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றது.

**VI. வாதுரைகள்:**

**1. அரசு தரப்பில்:**

9. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிக்கு எதிரான வழக்கு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எதிரிகள் ஒன்றுசேர்ந்து புகார்தாரரை ஒருமையில் பேசி, அரசுப் பணியை செய்யவிடாமல் தடுத்துள்ளனர் என்பதை அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

**2. எதிரிகள் தரப்பில்:**

10. எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது, எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கு சம்பவத்திற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றும், கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றும், எதிரிகள் மீது தவறாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரிகள் அரசு பணியை செய்யவிடாமல் எந்தவகையிலும் இடையூறு ஏற்படுத்தவில்லை என்றும், அரசு தரப்பில் இவ்வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால் எதிரிகளை விடுதலை செய்யவேண்டுமென்று வாதிட்டார்.

**VI. ஆய்விற்குரிய பிரச்சனை:**

11. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரிகளுக்கு எதிரான அரசு தரப்பு குற்றச்சாட்டுக்கள் நியாயமான

முறையில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா?என்பதே ஆகும்.

**VII. தீர்வு:–**

10. அரசு தரப்பு வழக்கானது, கடந்த 10.02.2013ம் தேதி இரவு 00.30 மணிக்கு துர்காதேவி என்பவர் தாயாரின் வீட்டில் இருக்கும்போது தகராறு செய்ததாக கொடுத்த புகாரைப் பெற்று சாட்சி 1 ஆன சார்பு ஆய்வாளர் திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய குற்ற எண். 77/2013 பிரிவு 147, 294(பி), 448, 427, 323, 506(ii) இதச ஆக வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வந்த நிலையில் மேற்கண்ட வழக்கின் எதிரிகள் நீதிமன்றத்தின் மூலமாக முன் ஜாமின் பெற்று 01.03.2013ம் தேதி திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் தினமும் 10.00 மணிக்கு கையெழுத்து போட உத்தரவு பெற்று கையெழுத்து போட்டு வந்த நிலையில் இன்று 02.03.2013ம் தேதி காலை சுமார் 09.35 மணிக்கு சாட்சி 1 நிலையத்தில் இருந்து நடப்புத்தாள்களை பார்வையிட்டு கொண்டு இருந்தபோது மேற்படி வழக்கின் எதிரிகள் நிபந்தனை ஜாமின் கையெழுத்து போடவந்தவர்கள், சாட்சி 1யிடம் கையெழுத்து போட கேட்கும் பொழுது, சாட்சி 1 அவர்களை பார்த்து 10.00 மணிக்குத்தான் கையெழுத்து போடவேண்டும் ஏன் முன்னாடியே வருகிறீர்கள் என்று கேட்டவரிடம், 2,4 எதிரிகள் நீ எப்படி எங்க மீது FIR போடலாம் என்று ஒருமையில் பேசியும், மற்ற மூன்று எதிரிகள் எங்களுக்கு DIG, IG மற்றும் பெரிய பெரிய அதிகாரிகளெல்லாம் இருக்காங்கள், எங்கள் மீது FIR போட்ட விபரம் தெரிந்தால் உன்னை தொலைத்து கட்டிவிடுவார்கள் என்று மிரட்டியும், எதிரிகள் அனைவரும் மேற்படி நடப்பு தாள்களை பார்க்கவிடாமல் அரசு

பணியை தடுத்தும், 2ம் எதிரி வாசலில் நின்று நீ வெளியே வா உன்னை என்ன செய்கிறேன் பாரு என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 1 முதல் 5 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 353, 506(i) IPC–ன் கீழ் குற்றம் சாட்டியுள்ளது.

11. மேற்சொன்ன குற்றச்சாட்டை அரசுத் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட புகாரைப் பரிசீலனை செய்யும்போது, அதில் "இன்று 02.03.2013ம் தேதி காலை 09.35 மணிக்கு நான் நிலையத்தில் இருந்து உயர் அதிகாரிகளிடம் இருந்து வந்த நடப்பு தாள்களை பார்வையிட்டுக் கொண்டு இருந்த போது, மேற்படி வழக்கின் எதிரிகள் நிபந்தனை ஜாமின் கையெழுத்து போட நிலையத்திற்கு வந்தார்கள். 10.00 மணிக்குத்தான் கையெத்து போடவேண்டும். ஏன் முன்னாடியே வந்தீர்கள் என்று கேட்டதற்கு பொன்ராஜ், அஸ்டலெட்சுமி ஆகியோர்கள் நீ எப்படி எங்கள் மீது FIR போடலாம் என்று ஒருமையில் பேசியும், மற்ற எதிரிகள் எங்களுக்கு IG. DIG மற்றும் பெரிய பெரிய அதிகாரிகளெல்லாம் இருக்காங்க எங்கள் மீது FIR போட்ட விபரம் தெரிந்தால் உன்னை தொலைத்துகட்டிவிடுவாங்க என்று மிரட்டி நடப்புத் தாள்களை பார்க்கவிடாமல் தடுத்தார்கள்" என்று புகார்தாரர் புகார் அளித்துள்ளார். மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையைப் பரிசீலனை செய்யும்போதும் மேற்சொன்ன சங்கதிகள் இடம்பெற்றுள்ளன.

12. ஆனால், இவ்வழக்கில் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட புகார்தாரர் தனது முதல் விசாரணையில், "02.03.2013 அன்று காலை 9.35 மணிக்கு,

தான் நிலையத்தில் இருந்தபோது, எதிரிகள் ஜாமின் கையொப்பம் போடவந்தார்கள். நான் அவர்களைப் பார்த்து 10.00 மணிக்கு தான் கையொப்பம் இடவேண்டும். ஏன் முன்கூட்டியே வருகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு பொன்ராஜ் அவரது மனைவி அஷ்டலெட்சுமி நீ எப்படி எங்கள் மீது FIR போடலாம் என்று ஒருமையில் பேசினார்கள். மற்ற எதிரிகள் பெரிய அதிகாரியெல்லாம் இருக்கிறார்கள். எங்கள் மீது FIR போட்ட விபரம் தெரிந்தால் உன்னை தெலைத்துகட்டிவிடுவார்கள் என்று எனது அரசு பணியைத் தடுத்தார்கள்" என்று சாட்சியம் அளித்துள்ளாரே தவிர, எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து சட்டவிரோத செயலில் ஈடுபட்டதாகவோ, தன்னை எந்த வகையில் அரசு பணியை செய்யவிடாமல் தடுத்தார்கள் என்றோ, அல்லது கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றோ எந்தவிதமான சாட்சியமும் அளிக்காதபோது, புகாரின் உண்மைத் தன்மையில் இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுந்துள்ளது.

13. மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்ட பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தை பரிசீலனை செய்யும்போது, சம்பவமானது தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அறையில் நடந்ததாக குறிப்பிட்டுள்ளது. ஆனால் எதிரிகள் காவல் நிலையத்தில் நிபந்தனை கையொப்பம் செய்ய வந்தார்கள் என்பதற்கான ஆவணங்களையோ, நீதிமன்ற உத்தரவு நகல்களையோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. காவல்நிலையத்திற்கு பொதுமக்கள் அதிகமாக வந்து செல்லும் இடமாக இருந்தபோதிலும், அங்கு புகார் கொடுக்க வந்த பொதுமக்களையோ, அருகில் இருந்த நபர்களையோ,

இந்நீதிமன்றத்தில் சாட்சியாக முன்னிலைப்படுத்தி அரசு தரப்பு வழக்கிற்கு உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை.

14. மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி எதிரிகளின் குற்றச் செயலை உறுதியூட்டும் வகையில், மேற்படி காவல் நிலையத்தில் இருந்த CCTV பதிவுகளை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேலும், இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் என்பதால், இம்மாதிரியான வழக்குகளில் அவர்களை அக்கறை சாட்சிகளாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. முடிவாக, 1 முதல் 5 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 147, 353, 506(i) ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றவாணங்களின் மூலம் நிரூபிக்கப்படாததால், 1 முதல் 5 எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

16. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. சொத்துக்கள் பற்றிய உத்தரவு ஏதுமில்லை.

17. இவ்வழக்கின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக ரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07–ம் நாள் திங்கட்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பப்பட்டது.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.09.07 17:36:58 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**I. அரசு தரப்பு சாட்சிகள்**

| Sl. No. | Examined as | Name of Witness | Date of examination | Exhibits Marked |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | மனோகரன் த/பெ. பழனியாண்டி | 14.08.2026 | – |
| 2. | அ.சா.2 | அழகம்மாள் த/பெ. காளிதாஸ் | 14.08.2026 | – |
| 3. | அ.சா.3 | சில்வியா ஜாஸ்மின் த/பெ. ஆரோக்கியசாமி | 17.08.2026 | அ.சா.ஆ.1 |
| 4. | அ.சா.4 | சூர்யகலா க/பெ. மணிகண்டன் | 21.08.2026 | அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.4 |

**II. அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அ.சா.3 | 02.03.2013 | புகார் |
| 2. | அ.சா.ஆ.2 | அ.சா.4 | 02.03.2013 | பார்வை மகஜர் |
| 3. | அ.சா.ஆ.3 | அ.சா.4 | 02.03.2013 | மாதிரி வரைபடம் |
| 4. | அ.சா.ஆ.4 | அ.சா.4 | 02.03.2013 | முதல் தகவல் அறிக்கை |

**III. அரசு தரப்பு சான்றுப் பொருள்கள்** – இல்லை

**IV. எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள்கள்** – இல்லை

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.09.07 17:37:03 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**குறிப்பு:**

1. வழக்கின் முடிவு இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
2. எந்த சாட்சிகளும் 3 முறைக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
3. வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.